வேதாந்தமும், எண்ணும்

3 4 5

தொகுப்பாசிரியர்

பேரா. சி.பால்ராஜ்



கணபதி பதிப்பகம்

பாடியநல்லூர், சென்னை – 600 052.

உ

பிர்மமே சத்யம்

வேதாந்தமும், எண்ணும்

★3 ★4 ★5

வேதாந்த கட்டுரைகள் தொகுப்பு

தொகுப்பாசிரியர்

சி.பால்ராஜ் சுவாமிகள்

அருப்புக்கோட்டை அருள்மிகு நித்தியானந்த சுவாமி
என்ற மலையரசன் திருக்கோவில்
வேதாந்த ஞானசபை செயலாளர்
அருப்புக்கோட்டை.

கணபதி பதிப்பகம்

1/349, திருப்பூர்க்குமரன் தெரு,
பாடியநல்லூர், சென்னை-52.

பதிப்புரை

கணபதி பதிப்பகம்
1/349, திருப்பூர்க்குமரன் தெரு,
பாடியநல்லூர், சென்னை - 52.
கைபேசி : 94440 14117

வேதாந்தத்தில் மூன்று, நான்கு, ஐந்து என்ற எண்களை தனக்கே உரிய கணிதப் புலமையை பயன்படுத்தி வேதாந்த விளக்கங்களை ரத்தினச் சுருக்கமாக அதே சமயம் சொல்வன்மையுடன் எழுத்துக்களால் பதிவு செய்யும் பாக்கியம் பெற்ற தொகுப்பாசிரியரின் முன்பிறவி பயனின் பலனை நம்மால் உணர முடிகிறது.

அறுபது வயதிற்கு மேல் வேதாந்தப் பணியை முழுமையாக செய்துவரும் ஆசிரியரின் மிகப்பெரிய அரிய ஆன்மிகப் பணியையும், சேவையையும் அனைவருக்கும் வெளிப்படுத்தும் வண்ணம் உயர்ந்த கருத்துக்களை எழுத்து வலிமையுடன் வாரி வழங்கி உள்ள பரம்பொருளுக்கு எங்கள் இதயப்பூர்வ வணக்கங்களையும் வந்தனங்களையும் சமர்ப்பிக்கிறோம்.

பேராசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்று, வேதாந்த உரையாசிரியராக பணி ஏற்று இந்த இரண்டாம் தொகுப்பை மிகக் குறுகிய காலத்தில் அனைவருக்கும் சமர்ப்பித்துள்ளார். பணியில் ஓய்வு பெற்றாலும், ஆன்மிகப் பணிகளுக்கும், வேதாந்தப் பணிகளுக்கும் இடையறாது பணியாற்றும் அவரது உடல்நலமும், மனநலமும் என்றும் குறையாத காமதேனுவாக இருப்பின் அதுவே நாங்கள் பரம்பொருளிடம் வேண்டும் மேலான வேண்டுகோளாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தாண்டவராய சுவாமிகளையும், வடிவேல் செட்டியாரையும் நீக்கமற நினைக்கும்வண்ணம் சுருக்கமாகவும் ஆணையாகவும் வெளிப்படுத்தி உள்ளது மிகவும் பயனுள்ளதாக அமையும் என்றால் மிகையாகாது.

பஞ்சகோச விவேகம் என்பது சற்று கடினமாக இருந்தாலும் முமூட்சுகள் எளிதில் தொடும் வகையில் எளிமையாக வடித்துள்ளார்.

அன்னாரின் குருவான தவத்திரு. "கைவல்யம்" கந்தசாமி ஐயா அவர்களையும், பட்டறையில் வார்த்தெடுத்த பயனுறும் கருவியாக தன் ஆழங்கால்பட்ட தொகுப்புகள் மூலம் எடுத்துரைப்பதுடன் அவரை வாழ்த்தி வணங்கிப் பணிவையும் நன்றியையும் வெளிப்படுத்தி இருப்பது இக்கால சந்ததியினருக்கு மிகவும் போற்றத்தக்கதாகவும் எடுத்துக் காட்டாகவும் அமையும் என்பதை மிகவும் நெகிழ்வுடன் உணர்கிறோம்.

அன்னாரின் பணி சிறக்க பரம்பொருள் இடைவிடாது ஊக்குவிக்குமாக !!

இவண்
கணபதி பதிப்பகத்தார்

உ

ஓம்

என் உரை

ஆத்தி சூடி இளம்பிறை அணிந்து மோனத்திருக்கும்
முழுவெண்மேனியான் கருநிறங் கொண்டு பாற்கடல்
மிசைக் கிடப்போன் மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர் உருவகத்தாலே
உணர்ந்து உணராது பலவகையாகப்
பரவிடும் பரம்பொருள் ஒன்றே அதனியல் ஒளியுறும் அறிவாம்
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்
அதனருள் வாழ்த்தி அமர வாழ்வு எய்துவாம்.

அருப்புக்கோட்டையில் மட்டும் கணித மாணவர்களிடமும் பெற்றோர்களிடமும் அறிமுகமும் நற்பெயரும் பெற்றிருந்த எனக்கு தமிழ்நாடு முழுவதும் வேதாந்த அன்பர்களிடையே அறிமுகமும் நற்பெயரும் பெறக்காரணமாக வேதாந்த நூல்கள் நாநாசீவ வாதக்கட்டளை, திருவாசகம், கைவல்ய நவநீதம், விசார சாகரம், பஞ்சதசி, பகவத்கீதை முதலிய வற்றை தாயினும் சாலப்பரிந்து போதித்து வரும் எனது குருநாதர் அருப்புக்கோட்டை ஸ்ரீ மலையரசன் கோவில் வேதாந்த ஞானசபைத் தலைவர் "கைவல்யம்" கந்தசாமி ஐயா அவர்கள் திருவடிகளை வணங்குகிறேன்.

காரைக்குடி கோவிலூர் மடத்தில் சீர்வளர்சீர் நாச்சியப்ப சுவாமிகள் சமாதி ஆலய குருபூஜை விழாவில் மூன்று, ஐந்து, ஏழு என்ற தலைப்பில் சத்சங்கம் நடைபெறும் என ஸ்ரீமடாதிபதி சீர்வளர்சீர் மெய்யப்ப ஞானதேசிக சுவாமிகள்

ஏற்பாடு செய்திருந்தார்கள். அதற்காக இந்த தலைப்புகளில் சிறு குறிப்பு எடுக்கத் தொடங்கினேன். ஆனால் அந்த குரு பூஜையில் நான் கலந்து கொள்ள இயலவில்லை.

மூன்று என்ற தலைப்பில் ஆணையிட்டுச் சொல்லும் மூன்று கைவல்ய நவநீதம் பாடல்கள் பற்றிய ஒரு விளக்கக் குறிப்பும்; ஐந்து என்ற தலைப்பின் பஞ்சகோச விவேகம் என ஒரு விளக்கக் குறிப்பும் எழுதி அவைகளை திரு.கு.தியாகராஜன் சுவாமிகள் ஏற்பாடு செய்திருந்த ஒரு சத்சங்கத்தில் கலந்து கொள்ளும்போது அவரிடம் கொடுத்திருந்தேன். அவர்கள் நான்கு என்ற தலைப்பில் நான்கு மகாவாக்கியங்கள் விளக்கக் கருத்துக்களை எழுதத் தூண்டினார்கள். என்னுடைய இந்த கருத்துக்கள் எனது குருநாதர் தினசரி வகுப்புக்களில் அவ்வப் போது விளக்கியவற்றின் குறிப்புக்களே. என்னுடைய இந்த முயற்சி ஊமை பேச முயற்சிப்பது போன்றதே. குறைகளை பொறுத்தருள வேண்டுகிறேன்.

கணபதி பதிப்பகம் வாயிலாக இலவச வெளியீடாக வெளியிட்டு என் போன்றவர்களையும் உற்சாகப் படுத்தும் தீர்க்கதரிசி திரு.கு.தியாகராஜன் சுவாமிகள் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

குருவின் திருவடி சரணம்.

அருப்புக்கோட்டை
18.12.2015

பேராசிரியர் S.பால்ராஜ், M.Sc., M.Phil.,
ஸ்ரீமலையரசன் கோவில்
வேதாந்த ஞானசபைச் செயலர்
8, சிங்காரத்தோப்பு 4வது தெரு,
அருப்புக்கோட்டை - 626 101.
கைபேசி : 9443671890

உ

ஓம்

ஆணையிட்டுச் சொல்லும் மூன்று கைவல்ய நவநீதப் பாடல்கள் – விளக்கம்

1. தத்துவ விளக்கப் படலம் பாடல் (65)

தூல சூக்கும அஞ்ஞானம் தோன்றும் மூன்று அவத்தை தாமும்
காலம் ஓர் மூன்றும் சன்மக் கடல் எழும் கல்லோலங்கள்
போலவே வந்து வந்து போன எத்தனை என்பேன் நான்
ஆலமர் கடவுள் ஆணை அவைக்கெலாம் சாட்சி நீயே

2. தத்துவ விளக்கப் படலம் பாடல் (101)

கானல்நீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர் கனாவூர்
வானமை கயிற்றில் பாம்பு மலடிசேய் முயலின்கோடு
பீனமாம் தறிபுமானில் பிரபஞ்சம் எல்லாம் பொய்யே
ஞானம் மெய் மகனே உன்னை நம் ஆணை மறந்திடாதே.

3. சந்தேகம் தெளிதல் படலம் பாடல் (156)

இப்புவியில் இஞ்ஞானபூமி ஒன்றில் இரண்டில் அடைந்திருந்தாரானால்
அப்புருடர் மிலேச்சர் ஆகிலும் முத்தர் குருபாதத்து ஆணை மெய்யே
தப்புரை என்றவர் கெடுவார் நடுவான மறைகளை நீ சங்கியாதே
செப்பும் மொழி வழி திடமாய் அகம்பிரம்மம் என்றிருந்து தெளிந்திடாயே.

உரை : ஒரு குரு தனது சீடனாகிய சாதகனுக்கு பிரம்மம் சத்தியம் ஜகத் மித்தை; நீ அறிவுப் பொருள், நீ எல்லாவற்றிற்கும் சாட்சியாக உள்ளவன், நீ ஆன்மா என்று ஆணையிட்டுக் கூறுவதாக கைவல்ய நவநீத ஆசிரியர் ஸ்ரீதாண்டவராய சுவாமிகள் இந்த மூன்று பாடல்களில் கூறுகிறார்.

முதல் பாடலில் ஆதிகுரு ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி மீது ஆணையிட்டும், இரண்டாவது பாடலில் தன்மீது ஆணையிட்டும், மூன்றாவது பாடலில் குருவின் திருவடி மீது ஆணையிட்டும் கூறுகிறார்.

நான் யார் என்ற விசாரத்தில் சாதகன் பஞ்ச கோசங்களையும் நீக்கிப் பார்க்குமிடத்தில் பாழ்தானே மிஞ்சியுள்ளது. அங்கு உள்ள க்டும் இருளையா நான் என தீர்மானிப்பது என குழம்பி நிற்கிறான். அவனுக்கு தெளிவு பெற வைப்பதற்காக இங்கு உள்ள முதற்பாடலில் மூன்று தேகங்களும், மூன்று அவஸ்தைகளும், மூன்று காலங்களும் ஆகிய ஒன்பதும் பிறவிப் பெருங்கடலில் எழும் அலைகள் போல வந்து வந்து போகின்றவைகளாம். அவைகளுக்கெல்லாம் சாட்சியே நீ என்று ஆலமர் கடவுள் மீது ஆணையிட்டுக் கூறுகிறார். இருள் நீ அல்ல; அந்த இருளை, இருள் என்று பார்க்கும் அறிவுப் பொருள் நீயாகும். சூரிய ஒளி அல்லது விளக்கின் ஒளியானது இருளை ஓட்டும்; இருளை, இருள் என்று காட்டாது. ஆனால் ஆன்ம ஒளியாகிய அறிவு ஒளியானது இருளை இருள் என்று காட்டும். நீ அந்த அறிவுப் பொருள், நீ ஆன்மா என்று ஆதிகுரு தக்ஷிணாமூர்த்தி மீது ஆணையிட்டுக் கூறுகிறார்.

பிரம்மம் சத்தியம், ஜகத் மித்தை என்பதை ஒன்பது விதமான எடுத்துக் காட்டுகள் மூலம் தன்மீது ஆணையிட்டுக் கூறுவதாக இரண்டாவது பாடல் அமைகிறது. மலடி மகன், முயல் கொம்பு என்ற இரண்டும் சொல்மாத்திரம் ஆகும்; இருப்பும் தோற்றமும் இல்லாத அசத் வஸ்துக்களாம். ஆனால் பிரபஞ்சம் தோன்றுவதால் எப்படி அசத் என்று ஒப்புக் கொள்ள இயலும்? பிரபஞ்சத் தோற்றமானது கிளிஞ்சில் வெள்ளி, கந்தர்ப்ப நகர், கயிற்றில் பாம்பு, கட்டையில் புருடன் போல பொய்யான மாயத்தோற்றம் ஆகும். இந்த நான்கும் மித்யா

வஸ்துக்கள்; இவை தோற்றம் மாத்திரம் ஆகும். அதிஷ்டான ஞான்ம் உண்டான பிறகு அத்தியாசம் தோன்றுவது இல்லை. சிப்பியைத் தவிர வெள்ளியும், மேகக்கூட்டத்தைத் தவிர நகரமும், கயிற்றைத் தவிர பாம்பும், கட்டையைத் தவிர மனிதனும் இல்லை என்று தெளிந்த பிறகு வெள்ளி, நகரம், பாம்பு. மனிதன் தோன்றுகிறதில்லை. ஆனால் பிரபஞ்சப் பொருட்கள் பொய் என்று உணர்ந்தாலும் கானல் நீர், வானமை போல தோற்றிக் கொண்டிருக்கும் கானலிடத்தில் நீர் இல்லை, ஆகாயத்தில் நீல நிறம் இல்லை என்று தெளிந்த பின்னரும் அவை தோற்றிக் கொண்டிருந்தாலும் அவை அநுபவத்திற்கு வருவதில்லை. ஆனால் பிரபஞ்சமோ அநுப வத்திற்கு வரும். அநுபவத்திற்கு வந்தாலும் பிரபஞ்சம் பொய் என்று காட்டுவதற்காக கனாவூர் எடுத்துக்காட்டு கூறப்படுகிறது. இல்லாமேலே தோன்றிய கனவின் அநுபவம் ஜீவனின் அனைத்து இந்திரியங்களும் விழித்தவுடன் தெளிவாகி இல்லை என்று உணர்வது போல பிரபஞ்சம் ஆனது விசாரிக்கு மிடத்தில் எக்காலத்திலும் இல்லை பொய்; ஞானம் தான் மெய் என்று தன்மீது ஆணையிட்டுக் கூறுகிறார். இந்தப் பாடலின் விரிவான விளக்கத்திற்கு அருப்புக்கோட்டை ஸ்ரீமலையரசன் கோவில் வேதாந்த ஞானசபைத் தலைவர் திரு."கைவல்யம்" கந்தசாமி அவர்கள் எழுதி, சென்னை பாடியநல்லூர் கணபதி பதிப்பகம் வெளியிட்டுள்ள "வேதாந்த தத்துவத்திரட்டு" என்னும் நூலில் பிரம்மம் சத்தியம் ஜகத் மித்தை என்ற கட்டுரை பார்க்க.

கைவல்ய நவநீதம் ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் உரையில் பிரசங்கம் 164 பக்கம் 230ல் கூறப்படும் அனுபலப்தி நிரூபணம் கருத்து இங்கு கவனிக்கத் தக்கது.

"ஈண்டு நாநாவானவை சிறிதும் இல்லை" என்பதாகிய சுருதி பிரபஞ்சத்தின் திரைகாலிக அபாவம் (மூன்று காலத்திலும் இன்மை) கூறுகிறது. இங்கு பலவகையாகத் தோற்றுவன கொஞ்சம்கூட இல்லாதவையே என்பதன் மூலம் வேதம் இந்த உலகம் மூன்று காலத்திலும் இல்லை என்று கூறுகிறது. அநுபவத்திற்கு வருவதான பிரபஞ்சத்திற்கு மூன்று காலத்திலும் இல்லை என்பது பொருந்தாது. ஆகவே வேதம் பிரபஞ்சத்தை முற்றிலுமாக இல்லை என்று நீக்குதல் செய்ய வில்லை. மற்று எப்படி நீக்குகிறதோ எனில் பிரபஞ்சம் சத்தியமன்று; பாரமார்த்திகமன்று. ஆகவே சத்தியத்தோடு கூடிய, பாரமார்த்திகத்துவ விசிஷ்ட, பிரபஞ்சம் மூன்று காலத்திலும் இல்லை என்று வேதம் கூறுகிறது.

"நாநாவானவை ஈண்டு அற்பமும் இல்லை" என்னும் சுருதியால் பிரபஞ்சத்தை வெளிமுகமாகப் பார்த்து இல்லை என்று நிச்சயம் செய்து பிரபஞ்சம் பொய் என்றாவது, "ஆன்மாவே ஈதனைத்தும்" என்னும் சுருதியால் பிரபஞ்சத்தை உள்முகமாகப் பார்த்து "நான்" என்றாவது; நான் ஆன்மாவே என்றாவது பிரபஞ்சத்தை வெளியே உள்ளே பார்ப்பது அகமுகமாம்.

தத்துவ விளக்கப்படலம் கடைசிப் பாடலாகிய 101ஆவது பாடலில் ஒன்பது எடுத்துக்காட்டுகள் மூலம் நான்கு வகைகளில் விளக்கம் செய்து பிரபஞ்சம் பொய் ஞானம் மெய் என்று தன்மீது ஆணையிட்டுக் கூறுகிறார்.

மூன்றாவதான பாடலில் இந்த உலகத்தில் இந்த ஞானபூமி ஒன்றில் இரண்டில் அடைந்திருந்தாரானால் அந்தப்

புருடன் மிலேச்சராகிலும் முக்தர் என்று குருவின் திருவடி மீது ஆணையிட்டுக் கூறுகிறார். குருவின் திருவடி இறைவன் வாழும் ஆலயமாகும்.

ஒரு சாதகன் ஞானம் பெறும் படித்தரத்தை ஏழு ஞான பூமிகள் என்று வகுத்துள்ளார்கள் அறிஞர்கள். அவையாவன : சுபேச்சை, விசாரணை, தனுமாநசி, சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்த அபாவனை மற்றும் துரியம் ஆகும். ஞானபூமிகள் பற்றிய விரிவான விளக்கத்திற்கு அருப்புக்கோட்டை வேதாந்த ஞானசபை தலைவர் திரு. "கைவல்யம்" கந்தசாமி அவர்கள் எழுதி சென்னை பாடியநல்லூர் கணபதி பதிப்பகம் வெளியிட்டுள்ள "ஞானபூமி" என்ற வேதாந்த தத்துவ கட்டுரை கள் தொகுப்பு நூலைப் பார்க்க.

தீயோர் நட்பை நீக்கி உயர் ஞானம் விரும்புதல் சுபேச்சையாகும்

• ஞான சற்குருவை அடைந்து சத்சங்கம் பெற்று சாஸ்திர விசாரம் செய்து

ஞானம் பெற அப்பியசித்தல் இரண்டாம் ஞானபூமி விசாரணையாகும்

ஈடணாத்திரயம்-மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை- விட்டு மனது சுருங்குதல் மூன்றாம் ஞானபூமி தனுமாநசியாகும்.

முதல் மூன்று ஞானபூமிகளும் அப்பியாச நிலை; ஜாக்கிர அவஸ்தை. மூன்று ஞானபூமிகளையும் அடைந்தவன் முத்தர் அல்லன், அப்பியாசியாகும்.

சத்விஷயங்களைப் பற்றிக் கொண்டு உலகம் அனைத்தும் மாயை, பொய் என்பதை உணர்ந்து மனதில் உண்மை அறிவு உதித்தல் உண்மையில் நிலை பெற்றிருத்தல் நாலாம் ஞானபூமி சத்துவாபத்தி.

நடுப்பூமியாகிய சத்துவாபத்தி அடைந்தவன் பூரண ஞானம் கைவரப் பெற்ற பிரம்ம வித்து. இது சொப்பன அவஸ்தை. இவன் ஜாக்கிர நிலையிலிருந்து உலகைப் பார்த்தாலும் உலகம் சொப்பனப் பொருள் போல பொய்யாகத் தோன்றும்.

மனம் விஷய சம்பந்தம் இல்லாமல் உண்மை வஸ்துவில் நிலைபெற்று மாயா காரியங்களான பிரபஞ்ச விஷயங்களிலிருந்து விலகி பக்குவநிலை பெறுதல் ஐந்தாம் ஞானபூமி அசம்சத்தியாம்

அசம்சத்தி அடைந்தவன் வரன் எனப்படுவான். இது சமாதிநிலை. க்ஷீண சுழுத்தி நிலை என்றும் கூறுவதுண்டு. துக்க நிலையைக் கடந்து ஆநந்த நிலையில் பிரவேசிக்கிறான்.

பொருட்கள் தோற்றாத நிலை சமாதி அப்பியாசத்தால் திரிபுடிகள்

நீங்கப்பெற்று அத்துவைத ஆநந்தம் அடையும் நிலை ஆறாம் ஞான பூமி பதார்த்த அபாவனையாகும்.

இந்த நிலை அடைந்தவன் வரியான் எனப்படுவான். இது காட சுழுத்தி முதல் நிலை. இது தேக கைவல்யம், தேகத்தோடு இருந்து உயர்நிலை அடைதல். ஆநந்தத்தின் மத்திய நிலையை அடைகிறான்.

முதல் ஆறு ஞானபூமிகளின் அப்பியாச மிகுதியால் ஆன்ம சுபாவத்தில் இருந்தபடி இருக்கும் மோன நிஷ்டை ஏழாம் ஞானபூமி துரியமாகும்

இந்த நிலை அடைந்தவன் வரிட்டன் எனப்படுவான். இது காடசுழுத்தி இரண்டாம் நிலை. இங்கு தேக கைவல்யமும், விதேக கைவல்யமும் உண்டு. தேக கைவல்யம் துரியாதீதமல்ல. (துரியம் கடந்த நிலை அல்ல). விதேக கைவல்யம் துரியாதீதம்; இது நிர்விகற்ப சமாதி. இங்கு ஆநந்தத்தின் நிறைவு நிலையை அடைகிறான். கற்பனை இல்லாத சுத்த இடம்.

முதல் மூன்று ஞானபூமிகளை அடைந்தவன் ஜிஞ்ஞாசுவாம். அவன் அடுத்துள்ள ஞானபூமிகளை அடைவதற்கு முன் மரணம் அடைந்தால் சுவர்க்கம் போன்ற மேலான உலகத்தை அடைந்து, அங்குள்ள சுகங்களை எல்லாம் அநுபவித்து மீண்டும் பூமியில் அருளும் பொருளும் நிறைந்த வீட்டில் பிறந்து, மெல்ல மெல்ல வீடு பேறடைவான். இதற்குப் பின்னர் கீழான பிறவிகளுக்குப் போகிறதில்லை.

கடைசி மூன்று ஞானபூமிகளும் சமாதி நிலை

முதல் ஞானபூமியாகிய சுபேச்சையை அடைவதே மிகவும் கடினமானதாகும். இந்த முதல் ஞானபூமி கைவரப் பெற்றாலே முக்தியும் கைவரப் பெற்றதாகும். சுபேச்சை, விசாரணை என்ற இரு ஞானபூமிகளை அடைந்திருந்தா ரானால் அந்த புருடன் மிலேச்சராகிலும் முத்தர், இதை தப்புரை என்பது வேதக் கருத்துக்கு எதிரானது; கேடு விளைவிக்கும் என குருவின் திருவடி மீது ஆணையிட்டுக் கூறுகிறார்.

குருவின் தீட்சை இருமலம் நீக்கும்
குருவின் திருவடி பெருமலம் போக்கும்
குருவின் வாக்கு வேத வாக்காம்
குருவின் முத்திரை முக்தி முடிவே – திருமந்திரம்

வேதாந்த வித்தகர்களால் நரமாமிசம் சாப்பிடுபவளாக மிலேச்சராக உள்ள கற்கடி என்ற ராட்சசி, ஜீவன் முக்த ஞானியாக போற்றப் படுகிறார்.

குருவின் துணையுடன் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் முயற்சி மேற்கொண்டு நான் அறிவுப் பொருள், சாட்சி, ஆன்மா என உணர்ந்து அறிவோம்.

குருவின் திருவடி சரணம்.

உ

ஓம்

நான்கு மகாவாக்கியங்கள் – விளக்கக் கருத்து

சுருதிமுடி அனைத்திலும் நற்சாரமாகிச்
சுத்தமதாம் பரப்பிரம்ம சொரூபம் தன்னை
இருளறவே நேராக அறிவிக்கின்ற
இயல்புள்ள நான்கு மகாவாக்கியத்தின்
பொருளினை இங்கு எல்லோர்க்கும் இதமேயாகப்
பூன்ற சிவன் புகன்றபடி புகலுவாமே

– ரிபு கீதை, அத்தியாயம்–28, பாடல்–1

ஜீவ பிரம்ம ஐக்கியம் போதிக்கும் மகாவாக்கியங்கள் நான்கும் வேதங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒன்றாக, கருப்பொருளாக உள்ளன.

ரிக் வேதத்தில் ஐதரேய உபநிடதத்தில் உள்ள மகா வாக்கியம்,

பிரஞ்ஞானம் பிரம்மம்

அறிவே பிரம்மம் என பிரம்ம இலக்கணம் கூறுகிற காரணத்தால் இது இலக்கண மகாவாக்கியம் எனப்படுகிறது. ஞான வடிவமாக இருப்பதே பிரம்மம்.

யஜுர் வேதத்தில் பிரகதாரண்யக உபநிடதத்தில் (தைத்தரிய உபநிடதத்தில் என்றும் கூறுவதுண்டு) உள்ள மகாவாக்கியம்,

அஹம் பிரம்மாஸ்மி

நான் பிரம்மம் என அப்பியாசிக்கும் வாக்கியம் என்ற காரணத்தால் இது அப்பியாச மகாவாக்கியம் எனப்படுகிறது. ஆத்மாவே பிரம்மமாக இருக்கிறது.

சாம வேதத்தில் சாந்தோக்கிய உபநிடதத்தில் உள்ள மகாவாக்கியம். ஆதியில் ஆருணி மகரிஷியின் மகன் உத்தாலகர், தம் புதல்வர் சுவேத கேதுவுக்கு ஒன்பது முறை உபதேசித்து அருளிய மகாவாக்கியம்,

தத்துவமசி

அது நீயாக இருக்கிறாய் என போதிக்கும் வாக்கியம் என்ற காரணத்தால் உபதேச மகாவாக்கியம் எனப்படுகிறது.

அதர்வண வேதத்தில் முண்டக உபநிடதத்தில் (மாண்டுக்ய உபநிடதத்தில் என்றும் கூறுவதுண்டு) உள்ள மகாவாக்கியம்.

அயம் ஆத்மா பிரம்மம்

இந்த ஆத்மாவே பிரம்மம் என திட அபரோட்ச அநுபவம் கூறும் வாக்கியம் என்ற காரணத்தால் சாட்சாத்கார மகாவாக்கியம் எனப்படுகிறது.

ரிக்வேத மகாவாக்கியம் "பிரஞ்ஞானம் பிரம்மம்" மனன வாக்கியம் எனவும்,
யஜுர்வேத மகாவாக்கியம் "அஹம்பிரம்மாஸ்மி" அனுபூதிவாக்கியம் எனவும்,
சாமவேத மகாவாக்கியம் "தத்துவமசி" உபதேச வாக்கியம் எனவும்,
அதர்வணவேத மகாவாக்கியம் "அயம் ஆத்மா பிரம்மம்" சம்மத வாக்கியம் எனவும்
ரிபு கீதை, அத்தியாயம்-28, பாடல்-55 கூறுகிறது.

கைவல்லிய நவநீதம் ஆசிரியர் ஸ்ரீதாண்டவராய சுவாமிகள் பாயிரம் முதல் பாடலில் ரிக் வேத மகாவாக்கிய மாகிய "பிரஞ்ஞானம் பிரம்மம்" என்ற பதத்தையும் பாயிரம் இரண்டாவது பாடலில் அதர்வண தேவ மகாவாக்கியமாகிய "அயம் ஆத்மா பிரம்மம்" என்ற பதத்தையும் பாயிரம் மூன்றாவது

பாடலில் யஜுர் வேத மகாவாக்கியமாகிய "அஹம் பிரம்மாஸ்மி" என்ற பதத்தையும் பாயிரம் நான்காவது பாடலில் சாமவேத மகாவாக்கியமாகிய "தத்துவமசி" என்ற பதத்தையும் வைத்து வணங்குகிறார்.

இவ்வாறாக பாயிரம் முதல் நான்கு பாடல்களில் நான்கு வேதங்களின் மகாவாக்கியங்களின் அர்த்த சாரத்தைக் கூறியுள்ளார்.

இந்த மகாவாக்கியங்கள் நான்குமே ஜீவ பிரம்ம ஐக்கியம் என்ற ஒரே பொருளை உணர்த்துவன ஆகும். சாமவேத மகாவாக்கியமாகிய, உபதேச வாக்கியம் "தத்துவமசி"யை எடுத்து விளக்கத்தைப் பார்ப்போம்.

இது நிஷ்காம்ய புண்ணியத்தால் நான்கு சாதனங்களும் (நித்ய அநித்ய வஸ்து விவேகம், இகா முத்திரார்த்த பலபோக விராகம், சமாதி ஷட்க சம்பத்தி, முமூட்சுத்துவம்), அவாந்திர வாக்கிய (பரமாத்மாவின் சொரூபம் ஜீவனின் சொரூபம் போதிக்கும் வாக்கியம்) சிரவணத்தால் பரோட்ச ஞானமும் (மூடப்பட்ட ஞானம், கர்ணாத ஞானம், குரு உபதேசத்தால் பிரம்மத்தை குறிப்பாக தெரிந்து கொள்ளும் ஞானம்) உள்ளவர்களுக்கு போதிக்கத் தக்கது ஆகும்.

"தத்துவமசி" மகாவாக்கியத்தில், தத் (அது); துவம் (நீ); அசி (இருக்கிறாய்) என மூன்று பதங்கள் உள்ளன.

தத் (அது) பதத்திற்கு வாச்சியார்த்தமாகிய ஈஸ்வரனும் இலட்சியார்த்தமாகிய பிரம்மமும், மற்றைய மூன்று மகாவாக்கியங்களிலுமுள்ள பிரம்ம பதத்திற்கு வாச்சியார்த்த, இலட்சியார்த்தங்களாகும்.

துவம் (நீ) பதத்திற்கு வாச்சியார்த்தமாகிய ஜீவனும் இலட்சியார்த்தமாகிய கூடஸ்தனும், மற்றைய மூன்று மகாவாக்கியங்களிலுமுள்ள பிரஞ்ஞானம், அஹம், அயம் ஆத்மா என்ற பதங்களுக்கு வாச்சியார்த்த, இலட்சியார்த்தங்களாகும்.

அசி (இருக்கிறாய்) பதம் ஜீவ பிரம்ம ஐக்கியம் சுட்டும்.

"தத்துவமசி" மகாவாக்கியத்திற்கு அத்துவைதிகள், "அது நீயாக இருக்கிறாய்" (நீ அதுவாக இருக்கிறாய்) எனப்பொருள் கூறுகிறார்கள்.

வைணவர்களாகிய விசிஷ்டாத்துவைதிகள், "பரத்தின் தர்மமாக நீ ஆனாய்" எனப் பொருள் கூறுகிறார்கள்.

மாத்வர்களாகிய துவைதிகள், "பரம்போல் நீ ஆனாய்" எனப்பொருள் கூறுகிறார்கள். விசிஷ்டாத்துவைதிகளும், துவைதிகளும் கூறிய இரண்டு விளக்கங்களுமே இறந்த காலம் சுட்டுகின்றமையால், பூர்வம் பிரம்மம் ஆகிய ஜீவனுக்கு போதிக்கும் உபதேசம் பயனற்றது ஆகும். பிரம்மம் நித்யம், சத்யம். இதன் காரணமாக நீ அதுவாக ஆவாய் என வருங் காலம் உணர்த்துவதாக பொருள் கூறுவதும் பொருந்தாது.

காட்டாற்றை நீந்தி கை அயர்ந்து கரையேறாமல் களைத்து வரும் நண்பனைப் பார்த்து கரையில் உள்ளவன் கரை வந்தாயிற்று, பயம் வேண்டாம் என்று கூறுவது போல பிராந்தி நீக்கத்தால் பிரம்மம் ஆகத் தக்கவனை "நீ பிரம்மம் ஆகிறாய்" எனக்கூறுவது மிகவும் பொருத்தமானதாகும்

முக்காலத்திலும் ஒத்தியல் பொருளை செப்புநர்
நிகழும் காலத்தானே – நன்னூல்

ஆகவே, "நீ அதுவாக (பிரம்மாகவே) இருக்கின்றாய்" என நிகழ்காலம் சுட்டுவதாக அத்துவைதிகள் பொருள் கூறுவது மிகவும் ஏற்புடையது ஆகும்.

ஸ்ரீமத் பகவத்கீதை பதினெட்டு அத்தியாயங்கள் உடையது. அவைகளுள் முதல் ஆறு அத்தியாயங்கள், "துவம்" (நீ) என்னும் பதத்திற்கு இலக்காக இருக்கிற ஜீவ தத்துவத்தை விஸ்தாரமாக விளக்குகின்றன. ஜீவனிடத்திலுள்ள குறைபாடு, ஜீவன் அடைய வேண்டிய நிறைநிலை, அதற்காக ஜீவன் எடுத்துக் கொள்ள வேண்டிய முயற்சி ஆகியவை இந்த முதல் ஷட்கம் ஆகும். இது கர்ம காண்டம்.

ஏழாவது முதல் பன்னிரண்டாவது முடிய உள்ள இரண்டாவது ஷட்கம், "தத்" (அது) என்னும் பதத்திற்கு இலக்காக இருக்கிற பர தத்துவத்தை – ஈஸ்வர தத்துவத்தை- விளக்குகிறது. உலகனைத்தும் பரமாத்மா எப்படி இருக்கிறார், உலகத்தில் அவர் எப்படி அந்தராத்மாவாக இருக்கிறார், பிறகு உலகத்தை கடந்தவராக அவர் எப்படி இருக்கிறார் ஆகியவை இந்த ஆறு அத்தியாயங்களில் அமைகின்றன. இது உபாசனா காண்டம்.

பதின்மூன்றாவது முதல் பதினெட்டாவது முடிய உள்ள மூன்றாவது ஷட்கம், "அசி" (இருக்கிறாய்) என்னும் பதத்திற்கு இலக்காக உள்ள ஜீவ, பிரம்ம ஐக்கியத்தை தெளிவு படுத்து கிறது. இது ஞான காண்டம்.

மகாவாக்கியத்தின் முறையான வியாக்கியானமாகவே ஸ்ரீமத் பகவத்கீதை அமைகிறது.

"தத்துவமசி" மகாவாக்கியத்தில்
"தத்" பதத்திற்கு ஈசன் வாச்சியார்த்தம்
"துவம்" பதத்திற்கு ஜீவன் வாச்சியார்த்தம்

எல்லாக் காலத்திலும் மாயை இல்லாததாகிய பிரம்மமே "தத்" பதத்திற்கு இலட்சியார்த்தமாகும்.

மூன்று சரீரங்களுக்கு வேறாய், பஞ்சகோசங்களுக்கு அப்பாற் பட்டதாய், மூன்று அவஸ்தைகளுக்கும் சாட்சியாய் அகம் (நான்) பதத்திற்கு இலட்சியார்த்தமாயுள்ள கூடஸ்தனே "துவம்" பதத்திற்கு இலட்சியார்த்தமாகும்.

ஈஸ்வரன் சர்வ சக்திமான், சர்வஞ்ஞன் (சர்வ அறிஞன்), எங்கும் வியாபகன் (விபு), சுதந்திரன், பரோட்சன், மாயையைத் தன் வசம் அடக்கி வைத்திருப்பவன், பிரம்மத்தினுடைய மாயாப் பிரதிபிம்பன் ஆகும்.

ஜீவன் அற்ப சக்தியுடையவன், அற்பஞ்ஞன் (அற்ப அறிவுள்ளவன்), பரிச்சின்னன், கர்மத்தின் வசப்பட்டவன், பிரத்தியட்சன், அவித்தையால் மயக்கப்பட்டுள்ள அவித்தியா மோகிதன், பிரம்மத்தினுடைய அவித்தியாப் பிரதிபிம்பன் ஆகும்.

ஈஸ்வரனும்-ஜீவனும், பாதாள லோகமும்-விண்ணுலகமும் போல வெகு தூரம் வேறு பட்டிருப்பதால் இவர்களுக்கு எக்காலத்திலும் ஐக்கியம் சம்பவிப்பது இல்லையாம்.

பிரம்மப்பிரத்தியட்ச அறிவிற்குக் கருவியாக இலக்கண, தர்க்க நூல்களை நன்கு கற்றுணர்ந்த வடமொழி வல்லுநர்கள் சுருதி ஸ்மிருதி முதலியவற்றிலிருந்து தாம் எடுத்துக் கூறும் கருத்துக்கள் பொருந்தாது விரோதப்படும் என்றால், அவை விரோதமில்லாமல் பொருள் கொள்வதற்காக இலட்சணா விருத்தியைப் பயன் படுத்துகிறார்கள். அவை விட்ட லட்சணை, விடாத லட்சணை, விட்டுவிடாத லட்சணை என மூன்று வகைப்படும்.

எங்கே வாச்சியார்த்தத்தை விட்டு, அதன் சம்பந்தியை உணர்த்துவது மூலம் கருத்து அறியப்படுகிறதோ அங்கே விட்ட லட்சணையாம்.

கங்கையில் கோஷம் என்பது கங்கையில் ஒரு கிராமம் என்பதாகும். இங்கு கங்கை நதியின் நீரில் ஒரு கிராமம் இருப்பது பொருந்தாது. ஆகவே வாச்சியார்த்தமாகிய நதிப் பிரவாகத்தை விட்டு அதன் தொடர்புடையதாகிய நதிக்கரையை எடுத்து, கங்கைக் கரையிலுள்ள கிராமம் என்று பொருள் கொள்வது விட்ட லட்சணை. இங்கே கங்கை நதிக்கு அதன் கரையோடு உள்ள சையோக சம்பந்தம் இலட்சணா விருத்தி. அதனால் அறியப்படும் கரை இலட்சியார்த்தம்.

எங்கே வாச்சியார்த்தத்தை விடாது, அதன் சம்பந்தி யையும் உணர்த்துவது மூலம் கருத்து அறியப்படுகிறதோ அங்கே விடாத லட்சணையாம். கருப்பு நிற்கிறது, சிகப்பு ஓடுகிறது என்று சொல்லும்போது (குணமாகிய) நிறம் நிற்கிறது; நிறம் ஓடுகிறது என்பது பொருந்தாது. இந்த நிறத்தை (குணத்தை) விடாது அதன் தொடர்புடையதான கருப்பு நிற மாடு நிற்கிறது; சிகப்பு நிற ஆடு ஓடுகிறது என்று குணத்தோடு குணியையும் சேர்த்து பொருள் கொள்வது விடாத லட்சணை யாகும். இங்கு குணத்திற்கு குணியோடு உள்ள தாதான்மிய சம்பந்தம் (கற்பித பேத, வாஸ்தவ அபேத சம்பந்தம்) இலட்சணா விருத்தி. அதனால் அறியப்படும் குணி இலட்சியார்த்தம்

எங்கே வாச்சியார்த்தத்தின் விரோதமுடைய ஒரு பகுதியை விட்டு, விரோதமில்லாத மற்றொரு பகுதியை விடாது கருத்து அறியப்படுகிறதோ அங்கே விட்டு விடாத லட்சணையாம் (பாகத் தியாக லட்சணையாம்). சோயம் (அந்த-இந்த) தேவத்தன் என்று சொல்லும்போது அதாவது, அந்த தேவதத்தனே இந்த தேவதத்தன் என்று சொல்லும் போது அந்த தேவதத்தன் என்பது இறந்த காலத்தில், தூர தேசத்தில் உள்ள தேவதத்தனையும், இந்த தேவதத்தன் என்பது நிகழ்

காலத்தில், சமீப தேசத்திலுள்ள தேவதத்தனையும் குறிக்கும். இங்கு உள்ள காலதேச விரோதத்தை விட்டு விட்டு, விரோதமில்லாத தேவதத்தனது உடம்பை விடாது, அவனே இவன்; இவனே அவன் என உணர்த்துவது விட்டுவிடாத (பாகத்தியாக) லட்சணையாம்.

இங்கே வாச்சியார்த்தத்தின் விரோதமில்லாத பாகமாகிய சரீரத்திற்கு, லட்சியார்த்தமாகிய சரீரத்தோடு உள்ள தாதாத்மிய சம்பந்தமும், வாச்சியார்த்தத்தின் விரோதபாகமாகிய கால தேகங்களுக்கு, லட்சியார்த்தமாகிய சரீரத்தோடு உள்ள சையோக சம்பந்தமும் இலட்சணா விருத்தி. அதனால் அறியப் படும் தேவதத்தன் சரீரம் இலட்சியார்த்தம்.

"தத்துவமசி" மகாவாக்கியத்தில் விட்ட லட்சணையைக் கொண்டு பொருள் கொண்டால், தத்-துவம் பதங்களின் வாச்சியார்த்தத்திலுள்ள சேதன பாகமும் விடுபட்டுப் போகும். விடாத லட்சணையைக் கொண்டு பொருள் கொண்டால் சேதனத்தோடு ஜடத்தையும் எடுத்துக் கொள்ளப்படும். ஆகவே இந்த இரண்டு முறையிலும் ஜீவப்பிரம்ம ஐக்கியம் சித்திக்காது.

தத் (அது); துவம் (நீ) பதங்களின் வேறுபட்ட தர்மங்களை உடைய வாச்சியார்த்த பாகமான மாயை, அவித்தைகளை விட்டு; வேறுபட்ட தர்மங்கள் இல்லாத பிரமமாயும், கூடஸ்த னாயும் உள்ள சேதன பாகமான லட்சியார்த்தத்தை விடாமல் எப்போதும் (தத்-துவம்) பிரம்மமே கூடஸ்தன்; (துவம்-தத்) கூடஸ்தனே பிரம்மம் என்னும் அசிபதத்தின் பொருளும் ஏகமே என்று ஐக்கியம் உணர்த்தப் படுகிறது.

தத்துவம் எனும் பதங்கள் பிரம்மமாய்ச் சாட்சி ஆன
வத்துவை விடாமல் பேத வாச்சியார்த்தத்தை விட்டு
நித்தமும் அது நீ ஆகும் நீ அது ஆகும் என்னும்
அர்த்தமும் அகண்டம் என்றே அசிபதம் ஐக்கியம் காட்டும்.

– கைவல்ய நவநீதம், தத்துவ விளக்கப்படலம் பாடல் (74)

பிரம்மமே கூடஸ்தன் மற்றும் கூடஸ்தனே பிரம்மம் என்று குறுக்கு நெடுக்கு ஆக (ஓதப்புரோத பாவமாக) கூறியது, தத்பத லட்சியார்த்தத்தில் உள்ள பரோட்சத்துவ பிராந்தி நீங்குவதற்கும், துவம் பத லட்சியார்த்தத்தில் உள்ள பரிச்சின்னத்துவ பிராந்தி நீங்குவதற்கும் ஆகும்.

தத்-துவம் (அது நீ-பிரமமே கூடஸ்தன்) என்பதனால் பரோட்சமாய் உள்ள தத்பத லட்சியார்த்தத்திற்கு, நித்திய அபரோட்சமாயுள்ள துவம்பத லட்சியார்த்தத்தோடு அபேதம் (ஒன்றே எனும் தன்மை) சித்தித்தலால் தத்பத லட்சியார்த் தத்தின் பரோட்சத் தன்மை பிராந்தி நீங்குகிறது.

துவம்-தத் (நீ அது-கூடஸ்தனே பிரமம்) என்பதனால் பரிச்சின்னமாய் உள்ள துவம் பத லட்சியார்த்தத்திற்கு, வியாபகமான தத்பத லட்சியார்த்தத்தோடு அபேதம் சித்தித்தலால், துவம் பத லட்சியார்த்தத்தின் பரிச்சின்னத் தன்மை பிராந்தி நீங்குகிறது. ஓதப்புரோத பாவகம் செய்ய பிரம்ம கூடஸ்த ஐக்கியத்தின் செவ்வையான ஞானம் உண்டாகிறது. ஆகவே மாயை, அவித்தைகளின் நிவிர்த்தி வாயிலாக பரோட்சத் தன்மை, பரிச்சின்னத் தன்மை வடிவ பிராந்தி நிவிர்த்தியாகிறது. இங்கே இவ்விரு பதங்களின் பரஸ்பர சமான அதிகரணிய சம்பந்தம் (ஒரு பொருளாக

இருக்கும் சம்பந்தம்) உள்ளது. மற்றும் தத் பதார்த்த ரூப ஈஸ்வர சைதன்யத்திற்கும், துவம் பதார்த்த ரூப ஜீவ்சைதன்யத்திற்கும் பரஸ்பரம் பேதப் பிராந்தியை நிவிர்த்தி செய்வதாயுள்ளது விசேஷண, விசேஷிய பாவ சம்பந்தமாம்.

தத்துவமசி என்னும்போது தத்பதார்த்தம் விசேஷியம்; துவம்பதார்த்தம் விசேஷணமாம். துவந்தத்தசி என்னும் போது துவம் பதார்த்தம் விசேஷியம்; தத் பதார்த்தம் விசேஷணமாம். இவ்வாறாக இருபதங்களும் பரஸ்பரம் அபேத (வேறாகாது) ரூபத்தால் விசேஷண விசேஷிய பாவம் செய்வதால் இரண்டின் பேத(வேறு என்ற) மயல் நீங்கும்.

மேலும், தத்–துவம் என்னும் இரு பதங்களுக்கும், அவ்விரு பதங்களின் அர்த்த ரூபமான ஈஸ்வர–ஜீவர்களுக்கும் வாச்சியார்த்தம் வாயிலாக அகண்ட சைதன்யத்தோடு இலட்சிய இலக்ஷண பாவ சம்பந்தம் உள்ளது.

அந்த இரு பதங்களும், பத அர்த்தங்களும், பரோட்சத்துவம் அபரோட்சத்துவம் என்ற விரோதமான அம்சங்களை நீக்கி விரோதமில்லாத அகண்ட சைதன்ய மாத்திரத்தையே அறிவிக்கின்றனவாம். ஆதலால் அப்பதங் களிலும், அப்பதங்களின் அர்த்தங்களிலும் இலக்ஷண ரூபத் தன்மையும், அந்த அகண்ட சைதன்யத்தில் இலக்ஷிய ரூபத் தன்மையும் உள்ளதாம்.

கூடஸ்த சேதனமும், பிரம்ம சேதனமும் சொல்லால் வேறாகவும், பொருளால் ஒன்றாகவும் உள்ளன. கூடஸ் தனுக்கும், பிரம்மத்திற்கும் ஐக்கியம் சொல்லும்போது முக்கிய சமான அதிகரணியம் சொல்லப்படுகிறது.

ஜீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் ஐக்கியம் சொல்லும்போது வாதசமான அதிகரணியம் சொல்லப்படுகிறது. (வாதித்தல் = நிவிர்த்தித்தல்) ஜீவபோதம் நீக்கப்படும் போது ஐக்கியம் சித்திக்கிறது.

பிரம்ம சைதன்யம், ஈச சைதன்யம், கூடஸ்த சைதன்யம், ஜீவ சைதன்யம் என நான்காக ஒரே சைதன்யம் தான் தோன்றுகிறது.

விண் ஒன்றை மகாவிண் என்றும் மேகவிண் என்றும் பாரில்
மண் ஒன்று கடவிண் என்றும் மருவிய சலவிண் என்றும்
எண்ணும் கற்பனைபோல் ஒன்றே எங்குமாம் பிரம்மம் ஈசன்
நண்ணும் கூடத்தன் சீவன் நான்கு சைதன்யமாமே

– கைவல்ய நவநீதம், தத்துவ விளக்கப்படலம், பாடல் 58.

காய்ச்சிய பாலில் கடைந்தெடுக்கும் நெய்போல சரீரத்தினுள் இருக்கும் ஜீவன், பஞ்ச கோசங்களையும் நீக்கி, விசாரம் என்ற மத்தினால் கடைய, மலமிலா ஆன்மா என்ற லட்சியப் பொருள் வெளிப்பட்டு விளங்கும்.

அகில சகன் நாயகனாம் பரேசன் தன்னை
அனவரதம் ஆதரவாய் ஆராதித்து
மிகவும் அருள் பெற்றவரே மனதின் சுத்தி
மேவினராய் விளம்பு மகாவாக்கியத்தின்
தகுபொருளைத் தடையறவே அநுபவித்துத்
தன்மயம் ஆவர்...

– ரிபுகீதை, அத்தியாயம்–28, பாடல்–60

குருவின் திருவடி சரணம்

உ

ஓம்

பஞ்சகோச விவேகம்

ஒரு சீவன் தன் நிஜ சொரூபமாகிய ஆத்மாவை தான் என்று உணர முடியாமல் மறைத்துக் கொண்டிருக்கும் ஐந்து உறைகளாக வடிவெடுத்திருக்கும் இந்த உடம்பு பிணமாகக் கூடியதென்றும், அது தானல்ல என்றும் நிச்சயிப்பதே பஞ்ச கோச விவேக அறிவாகும்.

பஞ்ச கோசங்களாவன :

1. அன்னமய கோசம் : தூலதேகமே அன்னமய கோசமாகும்.

2. பிராணமய கோசம் : பிராணனும், கர்மேந்திரியங்களும் சேர்ந்து பிராணமய கோசமாகும்.

3. மனோமய கோசம் : மனதும், ஞானேந்திரியங்களும் சேர்ந்து மனோமய கோசமாகும்.

4. விஞ்ஞானமய கோசம் : புத்தியும், ஞானேந்திரியங்களும் சேர்ந்து விஞ்ஞானமய கோசமாகும்.

5. ஆநந்தமய கோசம் : அவித்தையும், ஜீவனும் சேர்ந்து சுழுத்தி அவஸ்தையில் காரண சரீரமாக உள்ளது ஆநந்தமய கோசமாகும்.

பஞ்சகோசக்குகை :

அன்னமயமான தூல தேகத்தைப் பார்க்கிலும் பிராணமயன் உள்ளாகப் பொருந்தி இருக்கும்; பிராண மயனைப் பார்க்கிலும் மனோமயன் உள்ளாகப் பொருந்தி இருக்கும்; மனோ மயனைப் பார்க்கிலும் விஞ்ஞானமயன் உள்ளாகப் பொருந்தி இருக்கும்; விஞ்ஞான மயனைப் பார்க்கிலும் ஆநந்த மயன் உள்ளாகப் பொருந்தி இருக்கும்.

இவ்வாறு ஒன்றுக்கொன்று உள்ளாகப் பொருந்தி அமையும் இந்த கோசப் பரம்பரை பஞ்ச கோசக் குகையாகச் சொல்லப்படும்.

பொத்தொடு சடம் துக்காதி பொருந்து பேதங்களான
குத்திர பஞ்சகோசக்குகை விட்டு வெளியில் ஆவாய்.
– கைவல்ய நவநீதம்; தத்துவ விளக்கப் படலம் பாடல் 62

அன்னமய கோசம் :

தூல சரீரமாகிய அன்னமய கோசம் தோல், இரத்தம், மாமிசம், நரம்பு (சநாயு), எலும்பு, கொழுப்பு (மஜ்ஜை) ஆகிய ஆறு தத்துவங்களால் ஆனது. இது அசத்தாம். தூல பஞ்ச பூதங்களின் கூட்டுறவால் வந்தது. வினைக்கு விளைவாயது; அழியத்தக்கது. மாதா பிதா உண்ட அன்ன சாரமாகிய சுக்கில சுரோணிதமே காரணமாக அமைகிறது. உள்ளாக உட்கொண்ட உணவுப் பொருள்களையும் வெளியாக பயன்படுத்திய வாசனைத் திரவியங்கள்ளையும் மிக விரைவில் துர்நாற்ற முடையதாக மாற்றக்கூடியது. கருவாதல், உருவாதல், பருத்தல், இளைத்தல், சலித்தல், மரித்தல் ஆகிய ஆறுவித மாறுதல்களை உடையது. வாத, பித்த, சிலேத்தும நாடிக் குற்றங்களால் வியாதிகளில் அழுந்திக் கிடக்கும் இயல்பினது. உயிர் உள்ளவரையிலும் சிறப்பும், உயிர் நீங்கியதும் சிறப்பற்ற தன்மையும், மிக விரைவில் மயானத்தில் நெருப்பிட்டு எரிக்க மீண்டும் பஞ்ச பூதங்களாகவே மாறுவதுமான இயல்பினது.

பேரினை நீக்கி பிணம் என்று பெயரிட்டு
ஊரினைக் கூட்டி உரக்க அழுதிட்டு
தேரினில் கிடத்தி சுடலையில் எரியூட்டி
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தனரே

தூல தேகமே நான் என்கிற எண்ணம் எப்படி இருக்கிறதோ அது போல தூல தேகத்தை விளக்கி வைத்துக் கொண்டிருக்கிற சாட்சியே நான் என்கிற எண்ணம் உண்டாகிறபோது அன்னமய கோசம் நீங்கும். அப்போது சாட்சி தூலதேக சம்பந்தம் இல்லாத சத்தாகவே விளங்கும். தூல சரீரமாகிய அன்னமய கோசம் போக ஸ்தானம், போக ஆயதனம்.

பிரிவது எப்படி என்றக்கால் பிணமாகும் உடல் நான் என்னும்
அறிவினைக் கொல்லல் வேண்டும் ஐம்பூத விகாரமன்றோ
- கைவல்ய நவநீதம், தத்துவ விளக்கப்படலம் பாடல் 60

பிராணமய கோசம் :

பிராணனும், கர்மேந்திரியங்களும் சேர்ந்ததாகிய பிராண மய கோசம் சுத்த (கேவல) ரஜோகுண விகாரமாகும். சூட்சும தேகத்தில் இருக்கிறது. தூல சரீரத்தைப் பொருந்தி செயல் வடிவம் ஆவதற்கு காரணமாகிற பிராரப்த கர்மமே காரணமாக அமைகிறது. தூல சரீரத்தின் வழியாக புண்ணிய பாவ கர்மங்களை உண்டாக்கிக் கொண்டிருக்கும். ஜீவன் தனது நிஜ சொரூபத்தை அறியாமலும், உணராமலும் இருக்கிற காலம் வரையிலும், உடம்பின் உள்ளும் வெளியிலுமாக அலைந்து கொண்டிருக்கும். பிராணாதி வாயுக்கள் சரீரத்தில் பூரித்து சரீரத்திற்கு பலத்தைக் கொடுத்து, இந்திரியங்களை அவை களின் காரியங்களில் ஈடுபடச் செய்கிறது. தூல சரீர சம்பந்தம் உள்ள போது கர்மங்களில் ஈடுபடுவதின் வாயிலாக லாப-நஷ்டங்களையும், சுக-துக்கங்களையும் உண்டாக்கும். பிராண மய கோசம் ஜாக்கிர சொப்பன அவஸ்தைகளில் இருப்பதையும் மூர்ச்சை, மயக்கம், பிரளயம் ஆகிய காலங்களில் ஒடுங்கிக்

கிடப்பதையும் மரண காலத்தில் இல்லை என்பதையும் அறிவு சொரூபமாகிய சாட்சி அதற்கு வேறாக இருந்தே அறிகிறான். பிராண மய கோசம் கிரியா சக்தியுள்ள காரண ரூபம்.

வெறியதோர் துருத்தி மூச்சு விடுவதுபோல் உன் மூக்கால்
எறி பிராணனும் நீ அல்லை இராசத குண விகாரம்

- கைவல்ய நவநீதம், தத்துவ விளக்கப்படலம் பாடல்60

மனோமய கோசம் :

மனமும், ஞானேந்திரியங்களும் சேர்ந்ததாகிய மனோமய கோசம் ஞானேந்திரியங்களால் வியவகாரம் செய்வதாலும், அந்தக்கரண ரஜோகுண விருத்தியாகிய இச்சை முதலியவைகளோடு கூடி இருத்தலாலும் சத்துவகுணம், ரஜோகுணம் ஆகிய இரு குணங்களின் விகாரமாகும். (கைவல்ய நவநீதம், தத்துவ விளக்கப் படலம் பாடல் 61 மூலம் சத்துவ குணம் விகாரம் என்றே கூறுகிறது. ஸ்ரீ பஞ்ச தசீ தத்துவ விவேகம் பாடல் 41 மூலம் சத்துவகுணம் ரஜோகுணம் இரண்டின் விகாரம் என்று கூறுகிறது) சூக்கும தேகத்தில் இருக்கிறது. அநேக பிறவிகளில் செய்த பாவ புண்ணிய கர்மப் பதிவுகளும் மனதில் ஆசையால் உண்டான எண்ணப் பதிவுகளும், சஞ்சித கர்மமாக விளங்கிக் கொண்டிருப்பதே காரணமாக அமைகிறது. மனதில் நினைவு வடிவாய் நாமரூபங்களை தோன்றச் செய்வதாயும், மறதி வடிவாய் மறைக்கச் செய்வதாயும் அமையும். சித்–சட பேதங்களை அறியாததாலும் உணராததாலும் கர்மப் பதிவுகளும், வாசனைப் பதிவுகளும் வேற்றுமை எண்ண நினைவுகளாக உண்டாகிக் கொண்டிருக்கும். நாமரூபங்களின் சப்தம், பரிசம், ரூபம், ரசம்,

கந்தம் ஆகிய விஷயங்களில் விருப்பு வெறுப்பு உண்டாக்கும். விஷய ஆநந்தத்தை அடைந்தும் அநுபவித்தும் துன்பப்படுவதாயும், அடையாமலும் அநுபவிக்காமலும் துன்பப்படுவதாயும் அமையும்.

ஜாக்கிர சொப்பன காலங்களில் மனம் இருப்பதையும் சுழுத்தி, மயக்கம், மரணம், பிரளயம் ஆகிய காலங்களில் மனம் இல்லை என்பதையும் அறிவு சொரூபமாகிய சாட்சி அதற்கு வேறாக இருந்தே அறிகிறான். மனோமய கோசம் இச்சா சக்தியுள்ள காரண ரூபம்.

விஞ்ஞானமய கோசம் :

புத்தியும், ஞானேந்திரியங்களும் சேர்ந்ததாகிய விஞ்ஞான மய கோசம் சுத்த (கேவல) சத்துவ குண விகாரமாகும். இது சூட்சும சரீரத்தில் இருக்கிறது. நாம ரூபங்களில் வைத்துள்ள சத்திய புத்தி ஆகாமிய கர்மமாக வடிவெடுக்கிறது. பிறப்பை உண்டாக்குவதற்கு மூலகாரணமாக இருக்கிற ஆகாமிய கர்மமே விஞ்ஞானமய கோசத்திற்கு காரணமாக அமைகிறது. அநாத்மாவை ஆத்மா என்கிற நிச்சய புத்தியையும், ஆத்மாவை அநாத்மா என்கிற நிச்சய புத்தியையும் உண்டாக்கும். அநாத்ம தத்துவங்களில் உண்டாகிற நிச்சய புத்தியால் கர்த்தா போக்தாவாய் ஆபாச ஜீவனாய் பரிணமிக்கும். கர்த்தாவாயும் போக்தாவாயும் விளங்குகிற ஆபாச ஜீவன் ஜாக்கிர சொப்பனம் என்கிற காரிய அவஸ்தைகளில் கட்டுண்டு, தூல அஞ்ஞானத் திலும், தூல அவித்தையிலும் அடங்குவதாகும். ஒவ்வொரு நாளும் உறங்குவதாகிய மரணத்தையும், விழிப்பதாகிய பிறப்பையும் உண்டாக்கும். ஒரே அந்தக்கரணத்தில் மனோமய கோசமும் விஞ்ஞானமய கோசமும் வேறு வேறாய் வெளியேயும்

உள்ளேயுமாய் பொருந்தி இருக்கும். அவஸ்தை களின் பேதத்தால் ஒரே சூட்சும சரீரத்தில் மூன்று கோசங்களான பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞானமய கோசம் சொல்லப்படுகின்றன. விஞ்ஞானமய கோசம் ஞான சக்தியுள்ள கர்த்தா ரூபம்.

<u>ஆநந்தமய கோசம் :</u>

அவித்தையும், ஜீவனும் சேர்ந்ததாகிய ஆநந்தமய கோசம் சுழுத்தி அவஸ்தையில் காரண சரீரமாக உள்ளதாகும். விஞ்ஞானமய ஆபாச ஜீவன் தமோ குண அஞ்ஞான விருத்தியில் ஒடுங்கி இருப்பதே ஆநந்தமய கோசமாகும். காரண சரீரமாகிய அவித்தையிலுள்ள சத்துவ குணமும், இஷ்ட வஸ்துக்களின் தரிசன, லாப, போகங்களால் உண்டாகிற பிரியம் (இஷ்டம்); மோதம் (அடைதல்); பிரமோதம் (அநுபவித்தல்) என்னும் புத்தி விருத்திகளும் சேர்ந்து ஆநந்த மயம் எனப்படும் இந்த ஆநந்த மயமானது நான் பிரியன், நான் மோதன், நான் பிரமோதன், நான் அறியேன் என்பது போன்ற அத்தியாச ரூப அபிமானத்தால் நான் என்னும் விருத்திக்கு யதார்த்தமாய் விஷயமாக வேண்டிய பிரிய, மோத, பிரமோத விகாரங்களின்றிய ஆத்மாவை விஷயமாக அறிய முடியாமல் மறைக்கும். விசுவ ஜீவனை ஜாக்கிர அவஸ்தையில் தூல சரீரத்தில் பொருந்தி இருப்பதாயும்; தைஜச ஜீவனை சொப்பன அவஸ்தையில் சூட்சும சரீரத்தில் பொருந்தி இருப்பதாயும்; பிராஞ்ஞ ஜீவனை சுழுத்தி அவஸ்தையில் காரண சரீரத்தில் பொருந்தி இருப்பதாயும் அமையும். மூன்று வித ஜீவ அபிமானிகளும், மூன்றுவித அவஸ்தைகளும், மூன்றுவித சரீரங்களும், மூல அவித்தையில் மூல அஞ்ஞானத்தில் அடங்கியும் ஒடுங்கியும் இருக்கும்.

அளவில்லாத காலம் பிறப்பும் இறப்பும் உண்டாகி, சம்சார துக்கத்தில் அழுந்திக் கிடக்கும். போக்திரு சப்தத்தின் வாச்சி யார்த்தமாக ஆநந்தமய கோசம் உள்ளது. ஆநந்தமயனும், விஞ்ஞானமயனும் ஒரு பறவையின் இரு சிறகுகள் போல ஒன்றாகவே இருப்பதால் ஆநந்த விஞ்ஞானன் எனப்படும். ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, சமாதி ஆகிய காலங்களில் ஆநந்த விஞ்ஞானன் இருப்பதையும் நிர்விகற்ப சமாதியிலும் விதேக முக்தியிலும் இல்லை என்பதையும் அறிவு சொரூப மாகிய சாட்சி அதற்கு வேறாக இருந்து அறிகிறான்.

வரமுறு துயில ஆநந்த மயனையும் நான் என்னாதே
விரவிய தம அஞ்ஞான விருத்தியின் விகார மாமே
- கைவல்ய நவநீதம், தத்துவ விளக்கப்படலம் பாடல் 61

அரிய மெய்ஞ்ஞானத் தீயால் அவித்தையாம் உடல் நீறாகும்.
- கைவல்ய நவநீதம், தத்துவ விளக்கப்படலம் பாடல் 98

<u>முடிவுரை :</u>

ஒரு ஜீவன் தன் நிஜ சொரூபமாகிய ஆத்மாவை அறிய விடாமல் மறைத்துக் கொண்டிருக்கும் ஐந்து கோசங்களும் தன்னையும் அறியாது பிறவற்றையும் அறியாது.

கேவல நிலை தோன்றாமல் கெடுத்தது பஞ்சகோசம்
- கைவல்ய நவநீதம், தத்துவ விளக்கப்படலம் பாடல் 46

ஐந்து கோசங்களையும், அவை அடங்கும் மூன்று சரீரங் களையும் குடத்தை குடத்திற்கு வேறாக இருந்து குயவன் அறிவது போல ஆத்ம சொரூபமாகிய அறிவே அறிகிறது. ஜீவனுக்கு பஞ்ச கோசங்களை நீக்கி பிரத்தியக் அபின்ன (உள்ளிருந்து வேறாகாத) ஆத்மாவை வேறு பிரித்து அறிவது கர்த்தவ்ய மாகும் (செய்யத் தக்கதாம்)

தஞ்சமாம் குருவும் சொன்ன தத்துவ வழி தப்பாமல்
பஞ்ச கோசமும் கடந்து பாழையும் தள்ளி உள்ளில்
கொஞ்சமாம் இருப்பும் விட்டுக் கூடத்தன் பிரம்மம் என்னும்
நெஞ்சமும் நழுவி ஒன்றாய் நின்ற பூரணத்தைக் கண்டான்

– கைவல்ய நவநீதம். தத்துவ விளக்கப்படலம் பாடல் 76

சத்குரு உபதேசத்தாலும், சத்சாஸ்திர விசாரத்தாலும் அபரோட்ச ஞானம் உண்டாகி அதன்பின் கடைப்பிடிக்கப்பட்ட மகாவாக்கிய ஞான அப்பியாசத்தால் ஐந்து கோசங்களும் நீங்கும். கேட்டல், சிந்தித்தல், தெளிதல் முயற்சியினாலே நான் பிரம்மம் என்ற ஸ்திர ஞானம் உண்டாகும்.

குருவின் திருவடி சரணம்

பேரா. சி. பால்ராஜ் M.Sc., M.Phil.,
8, சிங்காரத்தோப்பு 4வது தெரு,
அருப்புக்கோட்டை – 626 101.
செயலாளர்
ஸ்ரீமலையரசன் கோவில்
வேதாந்த ஞானசபை
அருப்புக்கோட்டை – 626 101
கைபேசி : 94436 71890

கைவல்ய நவநீதத்தில் அமையும் பாடல்கள் **மூன்று**

மகா வாக்கியங்கள் **நான்கு**

பஞ்ச கோச விவேகம் **ஐந்து**

ஆசிரியரைப் பற்றி

தவத்திரு. **சி.பால்ராஜ் சுவாமிகள்** அவர்கள் கல்லூரி உயர் கணித பேராசிரியராக ஓய்வு பெற்ற 2000ம் ஆண்டு முதல் வேதாந்த மாணவராக, அருப்புக்கோட்டை ஸ்ரீ மலையரசன் கோவில் வேதாந்த ஞானசபை செயலாளராக தொண்டு செய்து வருகிறார். அருப்புக்கோட்டை ஸ்ரீமலையரசன் கோவில் வேதாந்த ஞானசபை தலைவர் **"கைவல்யம்" கந்தசாமி** அவர்கள் பிரதான சீடராகவும், வேதாந்தப் பணிகளை தமிழகம் முழுவதும் கொண்டு செல்லும் பெரும்பணியை கைவல்ய நவநீத ஞான பெருமன்றத்தின் சார்பாக இடையறாது பணியாற்றிவரும் இவரின் இரண்டாவது படைப்பாக வரும் இத்தொகுப்பு இன்னும் பல ஆய்வுகளை வெளிக்கொணர எல்லாம் வல்ல பரம்பொருள் வழிவகுக்குமாக!

இங்ஙனம்

R.S.இராமகிருஷ்ணன்

ஸ்ரீமலையரசன் கோவில்
வேதாந்த ஞானசபை உறுப்பினர்,
அருப்புக்கோட்டை.